சுருக்கம்

பேரிடர் மேலாண்மை – நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை மற்றும் சேந்தமங்கலம் ஆகிய வட்டாரங்களில் 01.05.2020 முதல் 31.05.2020 வரை மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக மரவள்ளி பயிர்கள் சேதமடைந்தது – பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்குதல் – மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.30,26,025/– (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) நிதி ஒப்பளிப்பு – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை,
பேரிடர் மேலாண்மை அலகு, பே.மே–3(1) பிரிவு

அரசாணை (நிலை) எண். 492

நாள் 15.09.2020
சார்வரி–ஆவணி 30,
திருவள்ளுவர் ஆண்டு, 2051
படிக்கப்பட்டது:

1. அரசாணை (நிலை) எண்.380, வருவாய்த் (பே.மே.3(2))த் துறை, நாள் 27.10.2015.
2. மாவட்ட ஆட்சியர், நாமக்கல் அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடிதம் ந.க.எண்.8592/என்.சி/2020, நாள் 23.06.2020.
3. இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை, சென்னை அவர்களிடமிருந்து வரப்பெற்ற கடித எண்.MISC/8091/2020, நாள் 18.07.2020.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிர்வாக ஆணையர் மற்றும் மாநில நிவாரண ஆணையர் (முகூபொ) அவர்களிடமிருந்து பெறப்பட்ட கடிதம் எண்.இ.பே.1/1988/2020, நாள் 17.08.2020.

––––

ஆணை:

மேலே நான்காவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் (முகூபொ) அவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அவர்கள், நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை மற்றும் சேந்தமங்கலம் ஆகிய வட்டாரங்களில் 01.05.2020 முதல் 31.05.2020 வரை மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக மரவள்ளிப் பயிர்கள் சேதம் அடைந்ததாக தெரிவித்துள்ளார் எனவும், நாமக்கல் மாவட்ட ஆட்சியர் 33 பாதிக்கப்பட்ட புலங்களை, வருவாய் மற்றும் தோட்டக்கலைத் துறையினர் ஒருங்கிணைந்து கூட்டுத் தணிக்கை /

ஆய்வு செய்து உரிய படிவத்தில் அறிக்கை அளித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்ட மரவள்ளிப் பயிர்களின் விவரம் பின்வருமாறு:—

| வ. எண் | கிராமம் | பயிர் | பயிரிடப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட பரப்பளவு (ஹெக்டேரில்) | பாதிக்கப்பட்ட விவசாயிகளின் எண்ணிக்கை | மாநில பேரிடர் நிவாரண நிதியின்படி வழங்கப்பட வேண்டிய தொகை (ரூபாயில்) |
|---|---|---|---|---|---|---|
| 1. | அரியகொண்டடம்பட்டி | மரவள்ளி பயிர் | 78.66 | 37.59 | 58 | 507465.00 |
| 2. | ஜேடார் பாளையம் | மரவள்ளி பயிர் | 30.27 | 15.85 | 32 | 213975.00 |
| 3. | தொ.பேச்சுடையம் பாளையம் | மரவள்ளி பயிர் | 11.92 | 7.67 | 12 | 103545.00 |
| 4. | நாமகிரிபேட்டை | மரவள்ளி பயிர் | 19.00 | 10.60 | 20 | 143100.00 |
| 5. | கோலக்கமேடு | மரவள்ளி பயிர் | 2.84 | 2.84 | 5 | 38340.00 |
| 6. | ஒ.பேச்சுடையம் பாளையம் | மரவள்ளி பயிர் | 2.70 | 1.35 | 2 | 18225.00 |
| 7. | ஒ.ஜேடார் பாளையம் | மரவள்ளி பயிர் | 1.20 | 1.20 | 1 | 16200.00 |
| 8. | பேச்சகொண்டான்பட்டி | மரவள்ளி பயிர் | 0.40 | 0.40 | 1 | 5400.00 |
| 9. | மூல பள்ளி பட்டி | மரவள்ளி பயிர் | 1.10 | 0.80 | 2 | 10800 |
| 10. | ஆர்.புதுப்பட்டி | மரவள்ளி பயிர் | 12.25 | 12.25 | 12 | 165375.00 |
| 11. | கள்குறிச்சி | மரவள்ளி பயிர் | 93.00 | 40.30 | 53 | 544050.00 |
| 12. | வலையபட்டி | மரவள்ளி பயிர் | 88.00 | 42.85 | 53 | 578475.00 |
| 13. | எச்சம்பட்டி | மரவள்ளி பயிர் | 97.00 | 41.50 | 55 | 560250.00 |
| 14. | பள்ளிப்பட்டி | மரவள்ளி பயிர் | 18.00 | 8.95 | 18 | 120825.00 |
| | மொத்தம் | | 456.34 | 224.15 | 324 | 30,26,025.00 |

மேற்கண்ட பட்டியலில் கண்டவாறு பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரணத் தொகையாக ரூ.30,26,025/— (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து வழங்குமாறு நாமக்கல் மாவட்ட ஆட்சியர் கேட்டுக்கொண்டுள்ளதாக கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் (முகூபொ) தெரிவித்துள்ளார். மேலும், இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை அவர்கள் நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை மற்றும் சேந்தமங்கலம் ஆகிய வட்டாரங்களில் 01.05.2020 முதல் 31.05.2020 வரை மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக மரவள்ளி பயிர்கள் சேதமடைந்ததினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு நிவாரண உதவித் தொகை வழங்க, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.30,26,025/— (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) வழங்க பரிந்துரை செய்துள்ளதாகவும் கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் (முகூபொ) அவர்கள் தெரிவித்துள்ளார்.

2. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் (முகூபொ) அவர்கள், நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவுகள் மற்றும் அதன்மீதான தோட்டக்கலை மற்றும் மலைப் பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் பரிந்துரை ஆகியவை, மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ஏற்படுத்தப்பட்ட, பேரிடர் நிவாரண நிதிக்கான நெறிமுறைகளின்படி பரிசீலனை செய்யப்பட்டதில், பிற்சேர்க்கை, வரிசை எண்.5B(a)ன்படி, வேளாண்மை, தோட்டக்கலை மற்றும் மலைத்தோட்டப் பயிர்களுக்கு ஹெக்டேர் ஒன்றுக்கு ரூ.13,500/— வீதம் நிவாரணத் தொகையாக வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார். மேலும், நாமக்கல் மாவட்ட ஆட்சியரின் முன்மொழிவு மற்றும் அதன்மீதான தோட்டக்கலைத்துறை மற்றும் மலைப்பயிர்கள் துறை இயக்குநர் அவர்களின் பரிந்துரை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு, நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை மற்றும் சேந்தமங்கலம் ஆகிய வட்டாரங்களில்

01.05.2020 முதல் 31.05.2020 வரை மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக மரவள்ளி பயிர்கள் சேதமடைந்ததினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிவாரண உதவித் தொகை வழங்க கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் (முகூபொ) அவர்கள் பரிந்துரை செய்து, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.30,26,025/– (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

3. கூடுதல் தலைமைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமாக பரிசீலனை செய்தது. பரிசீலனைக்குப் பின் நாமக்கல் மாவட்டம், நாமகிரிபேட்டை மற்றும் சேந்தமங்கலம் ஆகிய வட்டாரங்களில் 01.05.2020 முதல் 31.05.2020 வரை மாவுப்பூச்சி தாக்குதல் காரணமாக மரவள்ளி பயிர்கள் சேதமடைந்ததினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, நிவாரண உதவித் தொகை வழங்கும் பொருட்டு, மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து ரூ.30,26,025/– (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட தொகை கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

> "2245–இயற்கைச் சீற்றங்கள் குறித்த துயர் தணிப்பு – 80–பொது – 800–ஏனைய செலவு– மாநிலச் செலவினங்கள் – **AI**–பேரழிவை தடுக்கும் ஆயத்தப் பணிகள் / தடுப்பு நடவடிக்கைகள் – மரவள்ளிக் கிழங்கில் மாவுப் பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்துதல் – 309–உதவித் தொகை – 09–ஏனையவை''
> (பழைய த.தொ.கு. 2245 80 800 **AI** 0996)
> (**IFHRMS** த.தொ.கு. 2245 80 800 **AI** 30909)

5. மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ரூ.30,26,025/– (ரூபாய் முப்பது இலட்சத்து இருபத்து ஆறாயிரத்து இருபத்து ஐந்து மட்டும்) 2020–2021 ஆம் ஆண்டிற்கான திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் ஒதுக்கீடு செய்யப்படும். அத்தகைய செலவினத்தை எதிர்நோக்கி, மேலே பத்தி–3ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தை பெற்று வழங்க முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையருக்கு அதிகாரமளிக்கப்படுகிறது. மேலும், இச்செலவினம் 2020–2021 துணை மதிப்பீட்டில் (Supplementary Estimate) சேர்க்கப்பட்டு, சட்டமன்றப் பேரவையின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படவேண்டும். திருத்திய மதிப்பீடு / இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்ப்பதற்கும் தனித்தனியாக கருத்துக்களை உரிய நேரத்தில் நிதி (வருவாய் / வ.செ.பொ.1) துறைக்கு அனுப்புமாறு முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர் அவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

6. இவ்வரசாணை நிதி (வருவாய்) துறையின் அ.சா.எண்.28445/நிதி(வருவாய்)/2020, நாள் 11.09.2020ல் பெறப்பட்ட இசைவுடனும், கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.489 (நானூற்று எண்பத்து ஒன்பது)–இன்படியும் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

அதுல்ய மிஸ்ரா,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்.

பெறுநர்

முதன்மைச் செயலாளர் / வருவாய் நிருவாக ஆணையர்,
சேப்பாக்கம், சென்னை–600005.

ஆணையர் (பேரிடர் மேலாண்மை), தமிழ்நாடு பேரிடர் அபாய தணிப்பு முகமை,
சேப்பாக்கம், சென்னை–600005.

மாவட்ட ஆட்சியர், நாமக்கல்
மாவட்ட கருவூல அலுவலர், நாமக்கல் மாவட்டம்.
இயக்குநர், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை,
சேப்பாக்கம், சென்னை–600 005.
முதன்மை கணக்காயர், சென்னை–600018/600 035.
சம்பளம் மற்றும் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–600 008.

நகல்

கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
கூடுதல் தலைமைச் செயலாளர், உள், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
முதன்மைச் செயலாளர், பொதுப்பணித் துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வேளாண் உற்பத்தி ஆணையர் / முதன்மைச் செயலாளர்,
வேளாண்மைத் துறை, தலைமைச் செயலகம், சென்னை–600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சரின்
சிறப்பு நேர்முக உதவியாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
தலைமைச் செயலாளர் அவர்களின் முதுநிலை தனிச் செயலாளர்,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை
அவர்களின் முதன்மை தனிச் செயலாளர், தலைமைச் செயலகம், சென்னை–600009.
நிதி (வருவாய் / வ.செ.பொ–1 / வ.செ.பொ–2/வ.வ–1) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் (அநமு) துறை,
தலைமைச் செயலகம், சென்னை–600009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர். 15.9.20

15/09/20